தின கனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 223 | 4 Pages | 11.3.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 223 | 4 பக்கங்கள் | 11.3.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்**
**அற்குப ஆங்கே செயல்**

**விளக்கம்:**
**செல்வம் நிலைக்காத இயல்பை உடையது, அத்தகைய செல்வத்தைப்பெற்றால், பெற்ற அப்போதே நிலையான அறங்களைச் செய்ய வேண்டும்.**

# தர்மேந்திர பிரதானுக்கு நாவடக்கம் வேண்டும: முதல்வர் மு.க.ஸ்டாலின் காட்டம்

சென்னை, மார்ச். 11

மக்களவையில் "தமிழ்நாடு எம்.பி.க்கள்நாகரிகமற்றவர்கள்" என மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேசியதற்கு கடும் கண்டனம் எழுந்துள்ளது. இதற்கு கண்டனம் தெரிவித்த நிலையில், பேசியதை மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் திரும்ப பெற்றார்.

இந்த நிலையில் மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேச்சுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

தன்னை மன்னரென எண்ணிக் கொண்டு ஆணவத்துடன் பேசும் ஒன்றியக் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு நாவடக்கம் வேண்டும்!

தமிழ்நாட்டின் நிதியைத் தராமல் ஏமாற்றும் நீங்கள் தமிழ்நாட்டு எம்.பி.க்களைப் பார்த்து அநாகரிகமானவர்கள் என்பதா?

தமிழ்நாட்டு மக்களை அவமானப்படுத்துகிறீர்கள். பிரதமர் மோடி இதனை ஏற்கிறாரா?

NEP, மும்மொழிக்கொள்கையைத் தமிழ்நாடு அரசு அனுப்பிய PM SHRI MoU முற்றிலுமாக நிராகரித்துவிட்டது என எனக்குக் கடிதம் எழுதியது நீங்கள் தானே?



பிரதான் அவர்களே, நாங்கள் மக்களின் எண்ணங்களுக்கு மட்டுமே மதிப்பளித்துச் செயல்படுகிறோம்! உங்களைப் போல நாக்பூரின் சொற்களுக்குக் கட்டுப்பட்டு அல்ல!!

நாங்கள் உங்கள் திட்டத்தைச் செயல்படுத்த முன்வரவும் இல்லை, அப்படி முன்வராத என்னை யாரும் வற்புறுத்தவும் முடியாது.

தமிழ்நாட்டு மாணவர்களுக்குரிய நிதியை, எங்களிடம் இருந்து வசூல் செய்த வரியை விடுவிக்க முடியுமா முடியாதா என்பதற்கு மட்டும் பதில் கூறுங்கள்! என்று கூறியுள்ளார்.

# ரூ.1,435 கோடியில் பான் 2.0 திட்டம்; வருகிறது நவீன பான் கார்டு

புதுடெல்லி, மார்ச்.11

இந்தியாவில்1972ம் ஆண்டு நிரந்தர கணக்கு எண், அதாவது பான் எண் நடைமுறைக்கு வந்தது. 10 இலக்க எண்ணைக் கொண்ட பான் கார்டு வரி செலுத்துதல், வரி பிடித்தம் போன்ற தனிநபர் அல்லது நிறுவனத்தின் நிதி பரிவர்த்தனைகளை இணைப்பதில் முக்கிய பங்கினை வகிக்கிறது.

பான் கார்டு என்றாலே வருமான வரி தாக்கல் செய்வதற்கு மட்டும்தான் என்ற காலம் மலையேறி விட்டது. இப்போது எந்தவொரு அதிக மதிப்பிலான நிதி சம்பந்தமான பரிவர்த்தனைகளுக்கும், தங்கம், நிலம் வாங்குவதற்கும் பான்கார்டுகட்டாயம்.இதனால்வருமானவரிகணக்குதாக்கல்செய்கிறார்களோ இல்லையோ, மக்கள் பான் கார்டு வாங்கி வைத்துக் கொள்கின்றனர்.

தற்போது மத்திய அரசு வரி செலுத்துவோரின் அடையாளத்தை நவீனப்படுத்தும் நோக்கில் பான் 2.0 திட்டத்தை செயல்படுத்துகிறது. ரூ.1,435 கோடி மதிப்பிலான பான் 2.0 திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. பான் 2.0 திட்டத்தில் பல முக்கிய சிறப்பம்சங்கள் உள்ளன.

குறிப்பாக ஒருங்கிணைந்த டிஜிட்டல் போர்டல், க்யூஆர் (QR)குறியீடு செயல்படுத்தப்பட்ட பான் கார்டுகள் மற்றும் மையப்படுத்தப்பட்ட தரவு மேலாண்மை ஆகியவை அடங்கும்.

201718 முதல் பான் கார்டுகளில் QR குறியீடு ஒரு பகுதியாக உள்ளது. இருப்பினும், பான் 2.0 திட்டத்தின்கீழ், புதிய பான் கார்டுகளில் இடம் பெறும் QR குறியீடு தனித்துவம் வாய்ந்தது. QR குறியீடு பான் விவரங்களை சரிபார்த்து நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துகிறது. பான் 2.0 திட்டம், தடையற்ற மற்றும் பாதுகாப்பான வரி அனுபவத்திற்காக விரைவான செயலாக்கம், மேம்பட்ட பாதுகாப்பு மற்றும் செலவுத் திறனை உறுதி செய்கிறது.

பழைய பான் கார்டு வைத்திருப்பவர்கள் அது செல்லுபடியாகுமா, ஆகாதா என்பது குறித்து கவலைப்பட தேவையில்லை. ஏனென்றால் உங்களுடைய பான் எண் மாறாது என்பதால் உங்களிடம் தற்போது உள்ள பான் கார்டு செல்லுபடியாகும்.

தற்போது நாடு முழுவதும் சுமார் 78 கோடி பான் கார்டுகள் அமலில் உள்ளன. அவற்றில் 98 சதவீதம் பான் கார்டுகள் தனிநபர்களுடையது என தகவல். அதேசமயம், நம் நாட்டில் வருமான வரி கணக்கு தாக்கல் செய்பவர்கள் எண்ணிக்கை தோராயமாக 9 கோடி என்ற அளவில்தான் உள்ளது.

# மும்மொழி கொள்கை பற்றி 8 நகரங்களில் பா.ஜ.க. பொதுக்கூட்டம்: அண்ணாமலை பேசுகிறார்

சென்னை, மார்ச். 11

தேசிய கல்வி கொள்கை வலியுறுத்தும் மும்மொழி திட்டத்தை அரசு பள்ளிகளில் கொண்டு வர வேண்டும் என்று பா.ஜ.க. வற்புறுத்துகிறது. ஆனால் இருமொழி கொள்கையே தங்கள் லட்சியம் என்பதில் தி.மு.க. அரசு உறுதியாக உள்ளது.

இதையடுத்து பொதுமக்களிடம் கையெழுத்து வாங்கும் இயக்கத்தை பா.ஜ.க. தொடங்கி உள்ளது. தமிழகம் முழுவதும் ஒரு கோடி கையெழுத்துவாங்கதிட்டமிட்டுள்ளார்கள். மே மாதம் தான் இந்த திட்டம் முடிகிறது.

இதற்கிடையே மும்மொழி திட்டம் என்ன சொல்கிறது? இந்தியை மட்டும் திணிக்கவில்லை. தமிழ், ஆங்கிலத்துடன் கூடுதலாக ஒரு



மொழியைத்தான் கற்றுக்கொள்ள சொல்கிறது.

இதுபற்றி பொது மக்களிடம் மேலும் விவரிக்க விளக்க பொதுக்கூட்டங்கள் நடத்தி பேசுவதற்கு அண்ணாமலை முடிவு செய்துள்ளார். இதற்காக தமிழ்நாட்டில் 8 முக்கிய நகரங்களில் பொதுக்கூட்டங்கள் நடத்த பா.ஜ.க. திட்டமிட்டு உள்ளது. அதன்படி முதல் பொதுக்கூட்டம் வருகிற 23ந்தேதி திருச்சியில் நடைபெறுகிறது. மேலும் பொதுக் கூட்டம் நடைபெறும் இடங்கள் தேதி வாரியாக வருமாறு:

மார்ச் 25ந்தேதி திருநெல்வேலி, ஏப்ரல் 5ந்தேதி வேலூர், ஏப்ரல் 12ந்தேதிகாஞ்சிபுரம், ஏப்ரல் 19 ந்தேதி சேலம், ஏப்ரல் 26ந்தேதி சென்னை, மே 3ந்தேதி மதுரை, மே 11ந்தேதி கோவை.

இந்த கூட்டங்கள் நடைபெறும் ஒவ்வொரு கோட்டத்திலும் அந்த பகுதிகளை சேர்ந்த பொதுமக்களை கூட்டத்தில் பங்கேற்க செய்யும் வேலையில் கட்சியினர் இப்போதே தீவிரமாக இறங்கி இருக்கிறார்கள்.

# லலித் மோடியின் வானுவாட்டு பாஸ்போர்ட் ரத்து: இந்தியாவுக்கு நாடு கடத்தப்படுவாரா?



போர்ட் விலா, மார்ச். 11

ஐபிஎல் போட்டிகளின்போது நிதிமுறைகேடுகளில்ஈடுபட்டது தொடர்பாக கடந்த 2010ம் ஆண்டு லலித் மோடி மீது குற்றம்சாட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து இந்தியாவில் இருந்து வெளியேறிய அவர், லண்டனில் தஞ்சம்புகுந்தார். அந்த முறைகேடு தொடர்பாக அமலாக்கப் பிரிவு விசாரணை நடத்தி வருகிறது. அவரை நாடு கடத்துவது தொடர்பான நடவடிக்கைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கிடையே, வானுவாட்டு தீவில் தஞ்சமடைந்த லலித் மோடி, அந்நாட்டின் குடியுரிமையையும் பெற்றிருந்தார்.

மற்றொரு பக்கம், லலித் மோடி மீதான மோசடி புகார் குறித்து விசாரணை நடத்த இந்திய விசாரணை அமைப்புகள் தீவிரம் காட்டி வந்தன. அவருக்கு எதிராக இன்டர்போல் உதவியுடன் நோட்டீஸ் வெளியிட அமலாக்கத்துறை ஏற்பாடு செய்து வருகிறது. இந்த நிலையில், இந்தியாவின் வேண்டுகோளை ஏற்று, லலித் மோடியின் பாஸ்போர்ட்டை ரத்து செய்ய அந்நாட்டு குடியுரிமை ஆணையத்திற்கு வனுவாட் தீவு நாட்டின் பிரதமர் ஜோதம் நேபத் உத்தரவிட்டுள்ளார்.

வானுவாட்டு தீவின் பாஸ்போர்ட் ரத்து செய்யப்பட்டுள்ளதால் லலித் மோடிக்கு புதிய சிக்கல் எழுந்துள்ளது. லலித் மோடி விரைவில் இந்தியாவுக்கு நாடு கடத்தப்படுவாரா? என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

# வேலையில்லா இளைஞர்களுக்கு ரூ.5 ஆயிரம் உதவித்தொகை பா.ம.க. பொது நிழல் நிதி நிலை அறிக்கையில் தகவல்

திண்டிவனம், மார்ச். 11

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் தைலாபுரம் தோட்டத்தில் தமிழ்நாட்டு மக்களுக்கான திட்டங்களை வகுப்பதிலும், நிதி நிலை அறிக்கையை தயாரிப்பதிலும் அரசுக்கு வழிகாட்ட வேண்டும் என்ற 20032004ம் ஆண்டு முதல் பா.ம.க. சார்பாக பொது நிழல் நிலை அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது.

இந்நிலையில், இன்று பொது நிழல் நிதி நிலை அறிக்கையை பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் மற்றும் பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் ஆகியோர் வெளியிட்டனர்.

இந்த அறிக்கையில் மொத்தம் 109 தலைப்புகளில் 359 யோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அதில் இடம் பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:

தமிழ்நாட்டின் வருவாய் வரவுகள் ரூ.5,43,442 கோடியாக இருக்கும். இது கடந்த ஆண்டின் வருவாய் வரவை விட ரூ.1,91,602 கோடி அதிகமாக இருக்கும். கனிம வளங்களை சிறப் பான முறையில் கையாளு வதன் மூலம், வரி அல்லாத வருவாயாக ரூ.2,02,010 கோடி ஈட்ட திட்டம் வகுத்திருப்ப தால்தான் இந்த அளவுக்கு அதிக வருவாய் சாத்தியமாகிறது.

நடப்பாண்டின் மொத்த செலவினம் ரூ.5,68,978 கோடியாகவும், வருவாய் செலவினம் ரூ.4,97,123 கோடியாகவும் இருக்கும். வருவாய் செலவினத்தில் ரூ.50,000கோடிநிலுவையில் உள்ள கடனை அடைப்ப தற்காக அசலாக செலுத்தப்படும்.



தமிழ்நாட்டில்அரசுத்துறைகளில் 6.5 லட்சம் காலிப் பணியிடங்கள் இருப்பது கண்டறியப் பட்டு உள்ள நிலையில், அவற்றை நிரப்ப நடப்பாண்டில் 2.5 லட்சம் பேருக்கு அரசு வேலைகள் வழங்கப் படும்.

அடுத்த 4 ஆண்டுகளில் தமிழக அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றுக்கு மொத்தம் 7.5 லட்சம் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள்

தொழில், உற்பத்தி, தளவாட மேலாண்மை, உள்ளிட்டவற்றின் மூலமாக அடுத்த 5 ஆண்டுகளில் ஒரு கோடி பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும்.

தமிழ்நாட்டில் ஜூலை 25ந்தேதி சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு தொடங்கப்படும். இதற்காக ரூ.400 கோடி நிதி ஒதுக்கப்படும்.

உள்ளாட்சி அமைப்பு களில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்படும். ஜனவரி 25ந்தேதி உலக தமிழ் மொழி நாளாக கடைபிடிக்கப்படும். ஏப்ரல் 1ந்தேதி முதல் பழைய ஓய்வூதிய திட்டம் அமுல்படுத்தப்படும்.

மே 1ந்தேதி முதல் மது விலக்கு அமுலுக்கு வரும். மும்மொழி கொள்கைக்கு இடமில்லை. ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு அரசு கலைக் கல்லூரி தொடங்கப்படும். புதிதாக 6 மருத்துவ கல்லூரிகள் தொடங்கப்படும். சமையல் கியாஸ் ரூ.318க்கு வழங்கப்படும்.

பெண்கள் உரிமைத் தொகை ரூ.2 ஆயிரமாக உயர்த்தப்படும். வேலையில்லாத இளைஞர் களுக்கு 10ம் வகுப்பில் தோல்வி அடைந்து இருந்தால் ரூ.1000, தேர்ச்சி பெற்றிருந்தால் ரூ.2000, பிளஸ்2 தேறியிருந்தால் ரூ.3 ஆயிரம், பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு ரூ.4 ஆயிரம், பட்ட மேற்படிப்பு முடித்தவர்களுக்கு ரூ.5 ஆயிரம் வழங்கப்படும்.

சென்னையில் அனைத்து பஸ்களிலும் இலவச பயணம், கோயம்பேடு பேருந்து நிலையம் பூங்கா வாக மாற்றப்படும். விமான நிலையத்தில் இருந்துகிளாம்பாக்கத்துக்குமெட்ரோ ரெயில் சேவை வழங்கப்படும். மின்சார கட்டணம் குறைக்கப்படும்.

# வாக்காளர் பட்டியல் தொடர்பாக மக்களவையில் விவாதிக்க ராகுல் காந்தி வலியுறுத்தல்



புதுடெல்லி, மார்ச்.11

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் 2வது அமர்வு இன்று தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்நிலையில், நாடாளுமன்ற மக்களவையில் பேசிய மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, வாக்காளர் பட்டியல் தொடர்பாக விவாதம் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இது குறித்து பேசிய அவர், "அரசாங்கம் வாக்காளர் பட்டியல்களை உருவாக்குவதில்லை என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் வாக்காளர் பட்டியல் விவகாரம் குறித்து விவாதம் நடத்த வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம். நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் குறித்து கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது" என்று தெரிவித்தார்.

முன்னதாக திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி. சவுகதா ராய் பேசுகையில், "வாக்காளர் பட்டியலில் குறைபாடுகள் உள்ளதாக மராட்டிய மாநிலம் மற்றும் அரியானாவில் சுட்டிக்காட்டப்பட்டது. அடுத்த ஆண்டு மேற்கு வங்காளம் மற்றும் அசாமில் தேர்தல்கள் நடைபெற உள்ள நிலையில், வாக்காளர் பட்டியல்கள்முழுமையாகதிருத்தப்படவேண்டும்.வாக்காளர்பட்டியல்களில் தவறுகள் ஏற்பட்டதற்கான காரணம் என்ன? என்பது குறித்து தேர்தல் ஆணையம் நாட்டிற்கு பதிலளிக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

# வங்கி நகை அடகு குறித்த புதிய விதிமுறையை ரிசர்வ் வங்கி திரும்பப்பெற வேண்டும் சீமான்

சென்னை, மார்ச். 11

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

பொதுமக்கள் வங்கியில் அடகு வைத்துள்ள நகைகளை முழுவதும் பணம் செலுத்தித் திருப்பி, மறுநாள் தான் மீண்டும் அடகு வைக்க முடியும் என்ற ரிசர்வ் வங்கியின் புதிய விதிமுறை ஏழை, எளிய மக்களைக் கடுமையாகப் பாதிக்கும் கொடும் அணுகுமுறையாகும்.

கந்து வட்டிக் கொடுமைகளிலிருந்து தப்பிக்கவும், அவசர அவசியத் தேவைகளுக்கும் ஏழை, எளிய மக்கள் உடனடி பண உதவி பெறுவதற்கு வங்கி நகைக்கடன்களையே பெரிதும் நம்பியுள்ளனர். குறைந்த வட்டியில் பாதுகாப்பான மற்றும் நம்பகமான கடன் பெறும் வழியாக இருந்த வங்கி நகைக்கடன் முறையை, ரிசர்வ் வங்கியின் புதிய அறிவிப்புக் கடினமானதாக மாற்றியுள்ளதால் பொதுமக்கள் மிகுந்த வேதனைக்கு ஆளாகியுள்ளனர்.

ரிசர்வ் வங்கியின் பழைய விதிமுறையின்படி, ஒவ்வொரு ஆண்டும் வங்கிகளில் நகை அடகு வைத்ததற்கான வட்டியை மட்டும் செலுத்தினாலே, அதே நாளில் நகையை மீட்டு மறு அடகு வைக்க முடியும். அதன் மூலம் குறைந்த செலவில் நகை ஏலம் விடப்படாமல் ஏழை எளிய மக்கள் காப்பாற்றிக் கொள்ளவும் அவ்விதிமுறை பயனுள்ளதாக இருந்தது. இதனால், தொடர்புடைய வங்கிகளுக்கு வட்டி தொகை முழுமையாகக் கிடைத்ததுடன், வட்டித்தொகை தொடர்ந்து கிடைப்பதற்கான வாய்ப்பாகவும் அமைந்து, வங்கிகளுக்கு லாபம் தருவதாகவும் அந்நடைமுறை இருந்தது.

ஆனால், ரிசர்வ் வங்கி தற்போது அறிவித்துள்ள புதிய விதிமுறையின்படி நகைகளை அசல் மற்றும் வட்டியுடன் முழுமையாகச் செலுத்தி மீட்டு, நகையைத் திருப்பிய மறுநாள்தான் மீண்டும் அதே நகைகளை அடகு வைத்துப் பணம்பெற முடியும். இதனால் கடன் வாங்கியவர்கள் முழுப் பணத்தையும் திரட்ட வேண்டிய நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஏழை மக்கள் மீண்டும் கந்து வட்டி வாங்கி, மீள முடியாத கடன் சுமையில் சிக்கும் சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆகவே, ஏழை எளிய மக்களை வாட்டி வதைக்கும் வகையில் ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள வங்கி நகைக் கடன் குறித்த புதிய விதிமுறைகளை உடனடியாகத் திரும்பப்பெற வேண்டுமென வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# மதுரை சுமதி கருத்தரித்தல் மையம் சுமதி மருத்துவமனையில் உலக மகளிர் தின நாளை முன்னிட்டு பெண்களுக்கான இலவச ஆலோசனை முகாம்




மதுரை சுமதி கருத்தரித்தல் மையம் சுமதி மருத்துவமனையில் உலக மகளிர் தின நாளை முன்னிட்டு பெண்களுக்கான இலவச ஆலோசனை முகாம் நடைபெற்றது இம் முகாமில் டாக்டர் சுனிதா பிரபாகரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது முதலில்வரும்50நபர்களுக்கு இலவச பரி சோதனையாக பாப் ஸ்மியர், மார்பக ஸ்கேன் அல்ட்ரா சவுண்ட் சோனோகிராபி தைராய்டு இரத்தம், சக்கரை நோய் கண்டறிதல் சிறுநீர் கோளாறு பல்வேறு நோய்களுக்கான இலவச பரிசோதனை இயக்குனர் சுனிதா பிரபாகரன் மற்றும் நிர்வாக இயக்குனர் டாக்டர் பிரபாகரன் தலைமையில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மருத்துவ முகாம் நடைபெற்றது இதில் பரிசோதனை செய்த நோயாளிகளுக்கு இலவசமாக மருந்து மாத்திரைகள் வழங்கி ஆலோசனையும் வழங்கப்பட்டது டாக்டர் மனோரமா அவர்களும் கலந்து கொண்டார் இந் நிகழ்வில்சிறப்புவிருந்தினராக Hon Jus G.R சாமிநாதன் காமாட்சி சாமிநாதன் கலந்து கொண்டனர் மேலும் பெண்கள் இயற்கையானஉடல்நிலையை வளர்த்து கொள்ள Food Seience nutrition டாக்ரித் ஜெய்சியா டாக்டர் ராஜேஷ் அவர்களும் ஆலோசனை வழங்கினர் சுமதி மருத்துவமனை மென்மேலும் வளர அனைத்து மகளிரும் வாழ்த்துக்கள் தெரிவித்து கொண்டனர்

# ஹோலி பண்டிகை: சொந்த ஊர்களுக்கு படையெடுக்கும் வடமாநில தொழிலாளர்கள்



திருப்பூர், மார்ச். 11

திருப்பூரில் பனியன் சார்ந்த தொழில் நிறுவனங்கள் அதிக அளவில் உள்ளன. இங்கு பீகார், ஒடிசா, மேற்கு வங்காளம் உள்பட பல்வேறு வடமாநிலங்களை சேர்ந்த தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் தீபாவளி உள்ளிட்ட பண்டிகை காலங்களில் சொந்த ஊர்களுக்கு செல்வது வழக்கம்.

இந்தநிலையில் வடமாநிலங்களில் ஹோலி பண்டிகை வருகிற 14ந்தேதி கொண்டாடப்பட உள்ளது. இதற்காக திருப்பூரில் உள்ள வடமாநில தொழிலாளர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்ல ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதைத்தொடர்ந்து சொந்தஊர்களுக்கு செல்ல திருப்பூர் ரெயில் நிலையத்தில் வடமாநில தொழிலாளர்கள் குவிந்து வருகின்றனர். திருப்பூர் வழியாக செல்லக்கூடிய டாட்டா நகர் மற்றும் தன்பாத் உள்ளிட்ட ரெயில்களில் வடமாநில தொழிலாளர்கள் அதிகஅளவில் சென்றனர். பலர் ரெயில்களில் இருக்கை இல்லாமல் படிகளில் அமர்ந்து சென்றனர். எனவே வடமாநில தொழிலாளர்களின் வசதிக்கேற்ப வடமாநிலங்களுக்கு கூடுதல் சிறப்பு ரெயில்கள் இயக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இன்று கனமழைக்கு வாய்ப்புள்ள 12 மாவட்டங்கள்

சென்னை, மார்ச். 11

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பூமத்திய ரேகையை ஒட்டிய வடகிழக்கு இந்தியப் பெருங்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதனால் இன்று கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். உள் தமிழகத்தில் வறண்ட வானிலை காணப்படும்.

நாளை தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், விருதுநகர், சிவகங்கை, மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

12ந்தேதி தென்தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வடதமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது.

13ந்தேதி முதல் 16 ந்தேதி வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

அடுத்த ஐந்து தினங்களுக்கான அதிகபட்ச வெப்பநிலை பற்றிய முன்னறிவிப்பு:

இயல்புநிலையிலிருந்து அதிகபட்ச வெப்ப அளவின் வேறுபாடு:

இன்று மற்றும் நாளை தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை பொதுவாக இயல்பை ஒட்டி இருக்கக்கூடும். 12ந்தேதி முதல் 14 ந்தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் 23° செல்சியஸ் இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது அதிகபட்ச வெப்பநிலை 3334° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்சவெப்பநிலை 2324° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 32 33° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்சவெப்பநிலை 2223° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

மீனவர்களுக்கான எச்சரிக்கை:

இன்று மற்றும் நாளை தென்தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோமீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

12ந்தேதி குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்றுமணிக்கு 35 முதல் 45 கிலோமீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்ட வேகத்திலும் வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

# பஸ்சில் இருந்து இறக்கி பிளஸ்1 மாணவனை அரிவாளால் வெட்டிய விவகாரம் 5 தனிப்படை அமைப்பு



ஸ்ரீவைகுண்டம், மார்ச். 11

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் அருகே உள்ள அரியநாயகிபுரத்தை சேர்ந்தவர் தங்க கணேஷ். இவரது மகன் தேவேந்திரன் (வயது 17).

இவர் நெல்லையில் உள்ள தனியார் பள்ளியில் 11ம் வகுப்பு படித்து வருகிறார். இன்று காலை வழக்கம்போல் பள்ளிக்கு செல்வதற்காக ஊரில் உள்ள பஸ் நிறுத்தத்தில் இருந்து பஸ்சில் ஏறி ஸ்ரீவைகுண்டம் சென்று கொண்டிருந்தார்.

அரியநாயகிபுரத்திற்கு அடுத்த ஊரான கெட்டியம்மாள்புரம் பகுதியில் பஸ் சென்று கொண்டிருந்தபோது அங்கு வந்த 3 பேர் கும்பல் பஸ்சை வழிமறித்து உள்ளே புகுந்தது. அந்த கும்பல் பஸ்சில் இருந்த தேவேந்திரனை இழுத்து வெளியே போட்டுள்ளனர். மேலும்கையில் வைத்திருந்த அரிவாளால் தேவேந்திரனை சரமாரியாக அந்த மர்ம கும்பல் வெட்டியுள்ளது. இதில் தேவேந்திரனுக்கு தலை மற்றும் கையில் வெட்டுகள் விழுந்து காயம் ஏற்பட்டது. இதனை பஸ்சில் இருந்தவர்கள் பார்த்து சத்தம் போடவே அந்த கும்பல் அங்கிருந்து தப்பியோடியது. இதுகுறித்து பஸ்சில் வந்தவர்கள் ஸ்ரீவைகுண்டம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த ஸ்ரீவைகுண்டம் துணை போலீஸ் சூப்பிரண்டு ராம கிருஷ்ணன், இன்ஸ்பெக்டர் பத்மபநாப பிள்ளை மற்றும் போலீசார் வெட்டுக்காயங்களுடன் கிடந்த தேவேந்திரனை மீட்டு சிகிச்சைக்காக ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் நெல்லை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில் கபடி போட்டி விளையாடுவதில் ஏற்பட்ட மோதலால் இந்த கொலை முயற்சி சம்பவம் நடந்துள்ளதாக கூறப்படுகிறது. இந்த சம்பவம் தொடர்பாக கொலை முயற்சியில் ஈடுபட்டவர்களை போலீசார் தேடி வருகின்றனர். இதனிடையே, மாணவனை அரிவாளால் வெட்டிய சம்பவம் குறித்து விசாரிக்க 5 தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது.

# சென்னை போரூர் ஏரியில் மீனுக்கு விரித்த வலையில் சிக்கிய ஆண் சடலம் மீனவர் அதிர்ச்சி



சென்னை, மார்ச்.11

சென்னையின் முக்கிய குடிநீர் ஆதாரமாக இருப்பது போரூர் ஏரி. இது ரெட்டேரி என்றும் அழைக்கப்படுகிறது. சென்னையின் தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ளது. இது சென்னைக்கு குடிநீர் ஆதாரமாக விளங்குவதால் 1995 ஆம் ஆண்டு முதல் இந்த ஏரியில் குளிப்பது, துணி துவைப்பது, நீச்சல் அடிப்பது உள்ளிட்டவை தடை செய்யப்பட்டுள்ளன. இந்தஏரியின்மொத்த பரப்பளவு 250 ஏக்கர் ஆகும். இங்கு 4 வடிப்பான்களை கொண்டு 24 மணி நேரமும் வாரத்தில் 7 நாட்களும் தண்ணீர் எடுக்கப்படுகிறது. இந்தநிலையில், போரூர் ஏரியில் மீன் பிடிக்க மீனவர்கள் விசைபடகுகளில் சென்று பிடிப்பது வழக்கம், அப்போது மீன் பிடிக்கும்போது மீனுக்கு விரித்த வலையில் அழுகிய நிலையில் ஆண் சடலம் இருப்பதை பார்த்து மீனவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். இது குறித்து போரூர் போலீசாருக்கு மீனவர்கள் தகவல் தெரிவித்தனர். தகவல் கிடைத்ததின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார், மீனவர்கள் மூலமாக உடலை கரைக்கு கொண்டு வந்தனர். சடலமாக மீட்கப்பட்டவர் சுமார் 40 வயது மதிக்கத்தக்க நபர் என தகவல் வெளியாகி உள்ளது. இது கொலையா, தற்கொலையா என்ற கோணத்தில் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். போரூர் ஏரியில் ஆண் சடலம் கண்டெடுக்கப்பட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# திருச்செந்தூர் கோவிலில் மாசி திருவிழா: பச்சை சாத்தி கோலத்தில் சுவாமி சண்முகர் வீதியுலா



தூத்துக்குடி, மார்ச். 11

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் மாசி திருவிழா கடந்த 3ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது.

விழாவில் ஒவ்வொரு நாளும் காலை, மாலையில் சுவாமி பல்வேறு வாகனங்கள் மற்றும் சப்பரத்தில் எழுந்தருளி வீதியுலா வந்து கோவில் சேர்தல் நடைபெற்று வருகிறது.

விழாவின் முக்கிய நிகழ்ச்சிகளான 5ம்திருவிழாவில் குடைவருவாயில் தீபாராதனையும், 7ம்திருவிழாவான நேற்று காலை 5 மணிக்கு உருகு சட்ட சேவையும், காலை 9மணிக்கு சுவாமி சண்முகர் வெற்றி வேர் சப்பரத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளித்து பிள்ளையன் கட்டளை மண்டபம் வந்து சேர்ந்தார். அங்கு சுவாமிக்கு அபிஷேகம், அலங்காரம் நடைபெற்றது. மாலை 4.20 மணிக்கு சுவாமி சண்முகர் சிவன் அம்சமாக சிகப்பு சாத்தி கோலத்தில் எழுந்தருளி எட்டு வீதிகளிலும் உலா வந்து மேல கோவில் சேர்தல் நடைபெற்றது.

8ம்திருவிழாவான இன்று கோவில் நடை அதிகாலை 5 மணிக்கு திறக்கப்பட்டது. 5.30மணிக்கு விஸ்வரூப தரிசனம், 6 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம் தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடைபெற்றது.

இன்று காலை வெள்ளி சப்பரத்தில் சுவாமி சண்முகர் பிரம்மன் அம்சமாக வெள்ளை சாத்தி கோலத்தில் எழுந்தருளி வீதியுலா வந்து மேல கோவில் சேர்தல் நடைபெற்றது. மதியம் 12மணிக்கு சுவாமி சண்முகர் விஷ்ணு அம்சமாக பச்சை கடைசல் சப்பரத்தில் பச்சை சாத்தி கோலத்தில் எழுந்தருளி எட்டு வீதிகளிலும் உலா வந்து மேல கோவில் சேர்தல் நடைபெற்றது.

விழாவின் சிகர நிகழ்ச்சியான 10ம்திருவிழா தேரோட்டம் நாளை மறுநாள் (12ந்தேதி) நடக்கிறது. அன்று காலை 7மணிக்கு மேல் 7.30 மணிக்குள் தேரோட்டம் நடக்கிறது . (13ந்தேதி) தெப்ப திருவிழா நடக்கிறது. அன்று இரவு 10 மணிக்கு சுவாமி குமரவிடங்க பெருமான் தெப்பத்தில் எழுந்தருளி 11 முறை தெப்பத்தில் சுற்றி வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். (14ந் தேதி) மாலை 4.30 மணிக்கு மஞ்சள்நீராட்டுதிருக்கோலத்துடன் எட்டு வீதிகளிலும் உலா வந்து பின்னர் சுவாமிக்கு அபிஷேகம் அலங்காரம் ஆகி சுவாமி, அம்பாள் மலர் கேடய சப்பரத்தில் எழுந்தருளி வீதியுலா வந்து கோவில் சேர்தல் நடைபெற்று விழா நிறைவுபெறுகிறது.

விழா ஏற்பாடுகளை கோவில் தக்கார் அருள் முருகன், இணை ஆணையர் ஞானசேகரன் மற்றும் கோவில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

# முடிவு எடுப்பதில் ஆளுமை திறன் இல்லாதவர் ஓ.பன்னீர்செல்வம்: ஆர்.பி.உதயகுமார் தாக்கு



மதுரை, மார்ச். 11

மதுரையில் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் இன்று கூறியதாவது:

அ.தி.மு.க.வில் எந்த வித சாதி பாகுபாடும் கிடையாது. அனைவரும் சம தர்மமாக இயக்கத்தில் உள்ளனர். ஜெயலலிதா மறைவுக்கு பின்பு பன்னீர் செல்வம் தர்மயுத்தம் தொடங்கினார். ஆனால் ஒட்டுமொத்த தொண்டர்களும், நிர்வாகிகளும் எடப்பாடியார் பின்னால் அணி வகுத்து நின்றார்கள்.

எடப்பாடியாரிடம் ஆளுமை திறன் உள்ளது. இதே பன்னீர்செல்வம் முதலமைச்சராகவும், அமைச்சராகவும் இருந்தார். ஆனால் எந்த ஒரு முடிவையும் உடனே எடுக்கமாட்டார். பன்னீர்செல்வத்தை இரண்டாம் இடத்திற்கு தகுதியானவராக இருந்தாரே தவிர, முதல் இடத்திற்கு தகுதி அவரிடம் இல்லை. அதேபோன்று முடிவெடுப்பதில் ஆளுமை அவரிடம் எதுவும் இருக்காது.

பன்னீர்செல்வம் அமைச்சராக இருந்த போது, அவரை பார்க்க சட்டமன்ற உறுப்பினர்கள், கட்சிக்காரர்கள் என அனைவரும் காத்திருப்பார்கள். அவர்களிடம் 10 நிமிடம் கழித்து பார்த்துக் கொள்ளலாம் என்று போய்விடுவார். இதே எடப்பாடியார் அமைச்சராக இருந்த பொழுதும் சரி, முதலமைச்சர் இருந்த போதும் சரி உடனடியாக அதற்கு தீர்வு காண்பார்.

ஜெயலலிதா இருக்கும்போதுஒருவேலையை மற்றவர்களை பார்க்க வைத்து அதை தான் செய்தது போல அம்மாவிடம் பேர் வாங்கிக் கொள்வார். அவர் இருக்கும்போதே பன்னீர்செல்வத்தின் மீது கட்சியினர் நம்பிக்கை இழந்தனர். அவரது மறைவுக்குப் பின்பு இந்த ஆட்சி ஒரு மாதம் கூட தாங்காது என்று கூறினார்கள். ஆனால் நான்கரை ஆண்டு காலம் சிறப்பான ஆட்சியை எடப்பாடியார் செய்தார்.

அதுமட்டுமல்ல 18 சட்டமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு எதிராக கவர்னரை சந்தித்தார்கள். உடனடியாக அவர்களை தகுதி நீக்கம் செய்து இடைத்தேர்தலை சந்தித்து வெற்றி பெற்றார். தினகரனை நம்பி சென்ற அந்த 18 சட்டமன்ற உறுப்பினர்களும் பாதி பேர் கடனாளியாக உள்ளனர், பாதி பேர் கட்சியில் இல்லை, மீதி பேர் தி.மு.க.வில் சேர்ந்து விட்டார்கள்.

இன்றைக்கு தி.மு.க.வும், பன்னீர்செல்வம் உட்பட பலர் அ.தி.மு.க. பலவீனமாக இருப்பதாக ஒரு தவறான பொய் பிரசாரத்தை பரப்பி வருகிறார்கள். கட்சி பலவீனமாக இருப்பது போல ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்குகிறார்கள். எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் கோபி, சிவகாசியில் தான் வெற்றி பெற்றார்.

அதனைத் தொடர்ந்து எம்.ஜி.ஆருக்கு செல்வாக்கு இல்லை என்று சொல்லி கருணாநிதி அப்போது மத்திய அரசிடம் கூறி ஆட்சியை கலைத்தார். பின்னர் நடைபெற்ற சட்ட மன்ற தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று எம்.ஜி.ஆர். மறையும் வரை முதலமைச்சராக இருந்தார்.

அதேபோன்று 1996 சட்டமன்றத் தேர்தலில் ஜெயலலிதா தோல்வி அடைந்த பின்பு கட்சிக்கு எதிர்காலம் இல்லை என்று கூறினார்கள். ஆனால் 2001, 2011, 2016 தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தார். அதேபோல் இன்றைக்கு பழைய பல்லவியைதான் பாடி வருகிறார்கள். நிச்சயம் 2026 சட்டமன்றத் தேர்தலில் எடப்பாடியார் தலைமையில் ஜெயலலிதா ஆட்சி மலரும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஆக்சிஜன் ஏற்றி வந்த லாரி மீது மற்றொரு லாரி மோதி விபத்து கியாஸ் கசிந்ததால் பரபரப்பு




அருப்புக்கோட்டை, மார்ச். 11

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையில் உள்ள மதுரைதூத்துக்குடி நான்கு வழி புறவழிச்சாலையில் உள்ள கஞ்சநாயக்கன் பட்டி விலக்கு பகுதியில் இன்று அதிகாலை லாரி ஒன்று தஞ்சாவூரில் இருந்து தூத்துக்குடியில் உள்ள தனியார் கியாஸ் நிறுவனத்திற்கு மருத்துவ கியாஸ் (ஆக்சிஜன்) ஏற்றிக் கொண்டு சென்று கொண்டிருந்தது.

சாலையோரத்தில் அந்த லாரி நின்று கொண்டிருந்த போது கொல்கத்தாவில் இருந்து தூத்துக்குடிக்கு பனை ஓலை கைவினை பொருட்கள் ஏற்றுமதி செய்வதற்காக வந்த மற்றொரு லாரி எதிர்பாராத விதமாக கியாஸ் ஏற்றி வந்த லாரியின் பின்புறம் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் இரண்டு லாரியின் ஓட்டுனர்களுக்கு காயம் எதுவும் இல்லை. ஆனால் லாரியில் இருந்த கியாஸ் டேங்கரில் இருந்து வாயு கசிந்தது. இதுகுறித்து தகவலறிந்த அருப்புக்கோட்டை தீயணைப்பு காவல்துறையினர் விரைந்து வந்து கியாஸ் கசிவை தடுத்து நடவடிக்கை மேற்கொண்டனர். இதனால் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ள து. விபத்து நடந்த இடத்திற்கு யாரும் செல்ல வேண்டாம் என காவல்துறையினர் அறிவுறுத்தினர். இந்த விபத்து குறித்து அருப்புக்கோட்டை தாலுகா காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

# தூத்துக்குடியில் கர்ப்பிணி பெண் உயிரிழந்த விவகாரம்: மாவட்ட சுகாதார அலுவலர் விளக்கம்



தூத்துக்குடி, மார்ச்.11

தூத்துக்குடி மாவட்டம் புதுக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் அனுமதிக்கப்பட்டு இருந்த ஜாஹிரா என்ற நிறை மாத கர்ப்பிணி, திடீரென உயிரிழந்தார். அவரது வயிற்றில் இருந்த குழந்தையும் உயிரிழந்தது. அங்கு பிரசவம் பார்க்க டாக்டர்கள் இல்லாத நிலையில் 2 செவிலியர்கள் மட்டுமே சிகிச்சை அளித்ததாக கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த உறவினர்கள், உயிரிழந்த பெண்ணின் உடலை வாங்க மறுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், மருத்துவர் இல்லாத காரணத்தால் கர்ப்பிணி பெண் உயிரிழந்ததாக கூறுவது உண்மைக்கு புறம்பான செய்தி என தூத்துக்குடி மாவட்ட சுகாதார அலுவலர் விளக்கம் அளித்துள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவித்து இருப்பதாவது;

தூத்துக்குடி மாவட்டம், புதுக்கோட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஜாஹீரா(30) பிரசவ வலி காரணமாக அனுமதிக்கப்பட்டார். அங்குள்ள மருத்துவரால் ஜாஹீராவிற்கு பிரசவத்திற்கான உடனடி சிகிச்சை தொடங்கப்பட்ட நிலையில், அவருக்கு கர்ப்பவாய் விரிவடைதலில் தொய்வு ஏற்பட்டது கண்டறியப்பட்டது. இதனால் தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு மருத்துவப் பரிசோதனைகள் நடைபெற்றது. அங்கு ஜாஹீராவை பரிசோதித்த போது மருத்துவர்கள், அவருக்கும் குழந்தைக்கும் நாடித்துடிப்பு இல்லை என கண்டறிந்தனர். தாய் மற்றும் சேயின் உடல் பிரேதப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், புதுக்கோட்டை மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 5 மருத்துவர் பணியிடங்கள் நிரப்பபட்டுள்ளன. 08.03.2025 தேதியில் எந்த மருத்துவர் பணியிடமும் காலியாக இல்லை. எனவே புதுக்கோட்டை மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் பணியிடம் காலியாக உள்ளது என்பதும், மருத்துவர் இல்லாத காரணத்தினால் தாயும் சேயும் இறந்துள்ளனர் என்பதும் உண்மைக்கு புறம்பான செய்தியாகும்."

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதுரை: ஜல்லிக்கட்டு அரங்கத்திற்கு வெளியே தீ விபத்து



மதுரை மார்ச்.11

மதுரை மாவட்டம் கீழக்கரையில் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் உள்ளது. இந்த அரங்கத்தில் இன்று ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெற்று வந்தது. அப்போது அரங்கத்தின் அருகில் இருந்த பணியாளர்கள் தங்கும் பகுதியில் திடீரென தீ கொளுந்து விட்டு எரிந்தது. உடனடியாக தகவல் அறிந்து வந்த தீயணைப்புத்துறையினர், விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

ஜல்லிக்கட்டு போட்டியை பார்க்க வந்த மர்ம நபர்கள் தீ வைத்துவிட்டு சென்றிருக்கலாம் என கூறப்படுகிறது. இந்த விபத்து தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். ஜல்லிக்கட்டு அரங்கின் வெளிப்பகுதியில் மர்ம நபர்கள் தீ வைத்து சென்றதால் அப்பகுதி சிறிது நேரம் பரபரப்புடன் காணப்பட்டது.

# வேலூர்: தேனீக்கள் கொட்டியதில் ஒருவர் உயிரிழப்பு





வேலூர்,, மார்ச்.11

வேலூர் மாவட்டம் குடியாத்தம் அடுத்த பரவக்கல் பகுதியைச் சேர்ந்தவர் செந்தில்குமார் (வயது 39). இவர் குடும்பத்துடன் அருகேயுள்ள கன்னி கோவிலுக்கு குலதெய்வ வழிபாட்டுக்கு சென்றுள்ளார்.

அப்பொழுது அங்கே பொங்கல் வைத்து சாம்பிராணி ஊதுபத்தி வைத்து குலதெய்வ வழிபாடு செய்தபோது அருகே இருந்த அரச மரத்தில் இருந்து தேனீக்கள் கிளம்பின. தேனீக்கள் பாய்ந்து வருவதை கண்டு அங்கிருந்த உறவினர்கள் அலறி அடித்து ஓடினர்.

இதையடுத்து தேனீக்கள் கொட்டியதால் படுகாயம் அடைந்த பத்துக்கும் மேற்பட்டோர் குடியாத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இதில் செந்தில்குமார் என்பவர் உயிரிழந்ததாக டாக்டர்கள் தெரிவித்தனர். மேலும் 11க்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். குலதெய்வ வழிபாட்டுக்குச் சென்ற இடத்தில் தேனீக்கள் கொட்டியதில் ஒருவர் உயிரிழந்து 11க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வரும் சம்பவம் உறவினர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# மயிலாடுதுறை: போலீசார் கூண்டோடு இடமாற்றம்




மயிலாடுதுறை, மார்ச். 11

மயிலாடுதுறை மாவட்டம் பெரம்பூர் போலீஸ் எல்லைக்கு உட்பட்ட முட்டம் கிராமத்தில் சாராய வியாபாரம் குறித்து போலீசுக்கு தகவல் தெரிவித்தது மற்றும் சாராய விற்பனையை தட்டி கேட்டது தொடர்பான பிரச்சினை கடந்த மாதம் வெடித்தது.

கடந்த மாதம் 14ம் தேதி இரவு சாராய வியாபாரிகளான ராஜ்குமார், அவரது மைத்துனர்கள் தங்கதுரை, மூவேந்தன் ஆகிய மூவரும் சேர்ந்து முன்விரோதம் காரணமாக தினேஷ் என்பவரை தாக்க முற்பட்டனர்.

அதனை தடுத்த முட்டம் ஹரிஷ், சீனிவாசபுரத்தைச் சேர்ந்த ஹரி சக்தி ஆகியோர் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டனர்.

இதுகுறித்து பெரம்பூர் போலீசார் வழக்கு பதிவு செய்து, ராஜ்குமார், தங்கதுரை, மூவேந்தன், முனுசாமி, மஞ்சுளா ஆகிய 5 பேரை கைது செய்தனர். இந்த இரட்டை கொலை சம்பவத்தின் எதிரொலியாக பெரம்பூர் போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் நாகவள்ளி காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டார்.

தொடர்ந்து எஸ்பி. தனிப்பிரிவு போலீஸ் பிரபாகர் பணியிட மாற்றம் செய்யப்பட்டார். சப் இன்ஸ்பெக்டர்கள் மணிமாறன், சங்கர் ஆகியோரும் அடுத்தடுத்து பணியிட மாற்றம் செய்யப்பட்டனர். இந்நிலையில் நேற்று இரவு பெரம்பூர் போலீஸ் ஸ்டேஷனில் பணியாற்றிய 19 போலீசாரை அதிரடியாக கூண்டோடு பணியிட மாற்றம் செய்து மாவட்ட எஸ்.பி. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். பெரம்பூர் போலீஸ் ஸ்டேஷன் உட்பட மாவட்டம் முழுவதும் நிர்வாக வசதிக்காக என மொத்தம் 70 போலீசார் அதிரடியாக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

# தி.மு.க. சார்பில் மாபெரும் படகுப்போட்டி துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்



சென்னை, மார்ச்.11

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினின் 72 வது பிறந்தநாளையொட்டி சென்னை ஈஞ்சம்பாக்கம் கடற்கரையில் மாபெரும் படகுப் போட்டி நடைபெற்றது. உத்தண்டி முதல் ஊரூர் வரை 13 மீனவ கிராமங்கள் பங்குபெறும் படகு போட்டியை துணை முதல்அமைச்சர் தொடங்கி வைத்தார்.

தி.மு.க. சார்பில் நடைபெற்ற இந்த படகுப் போட்டியில் படகுகள் சீறிப்பாய்ந்தன. இதனிடையே, போட்டியாளர்களுடன் தனி படகில் துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் மா.சுப்பிரமணியன் உள்ளிட்டோர் படகில் பயணம் செய்தனர்.

# பெண்கள் பாதுகாப்பு; விஜய்யின் பேச்சு குறித்து மேயர் பிரியா பதில்



சென்னை, மார்ச்.11

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு த.வெ.க. தலைவர் விஜய், மகளிருக்கு வாழ்த்து தெரிவித்து வீடியோ ஒன்றை வெளியிட்டார். அதில் பெண்களுக்கான பாதுகாப்பு குறித்து பேசிய அவர், தி.மு.க அரசு மீது விமர்சனத்தை முன்வைத்தார்.

இந்நிலையில், விஜய்யின் பேச்சு குறித்து சென்னை மேயர் பிரியாவிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த அவர், "முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பெண்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை கொண்டு வந்திருக்கிறார். புதுமைப் பெண் திட்டம் மூலம் ஏராளமான பெண்கள் கல்வி பயிலும் வாய்ப்பை பெற்றுள்ளனர். இது போன்ற குற்றச்சாட்டுகள் தேவையற்றது" என்று தெரிவித்தார்.

# பணிகள் முடிந்து தயார் நிலை: பாம்பன் புதிய ரெயில் பாலம் திறப்பு விழா எப்போது?



ராமேசுவரம், மார்ச்.11

பாம்பன் கடலில் தற்போதுள்ள ரெயில் பாலம் 110 ஆண்டுகளை கடந்த பழமையான பாலம் ஆகிவிட்டதால் அந்த பாலத்தின் அருகிலேயே சுமார் 50 மீட்டர் தூரத்தில் வடக்கு கடல் பகுதியில் ரூ.545 கோடியில் புதிதாக ரெயில் பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்த பாலத்தின் மையப்பகுதியில் சுமார் 75 மீட்டர் நீளமும், 650 டன் எடையும் கொண்ட செங்குத்து வடிவிலான தூக்குப்பாலமும் கட்டப்பட்டுள்ளது.

பாம்பன் கடலில் கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய ரெயில் பாலம் திறப்பு விழாவிற்கு தயார் நிலையில் உள்ளது. பிரதமர் நரேந்திரமோடியால் புதிய ரெயில் பாலம் திறந்து வைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதால் அருகிலுள்ள பழைய தூக்குப்பாலத்திலும் உப்பு காற்றால் துருப்பிடிக்காத அலுமினிய பெயிண்ட் அடிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் புதிய ரெயில் பாலத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைக்க வர உள்ளதால் இதுவரை 3 கட்டமாக ரெயில் மற்றும் கப்பல் இயக்கியும் ஒத்திகை நிகழ்ச்சியும் நடத்தப்பட்டு விட்டது. ஆனால் இதுவரை புதிய ரெயில் பாலம் திறப்பு விழா தேதி குறித்து ரெயில்வே துறை மூலம் அதிகாரப்பூர்வமாக எந்த ஒரு அறிவிப்பும் வரவில்லை.

ஜனவரி மாதம் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தற்போது மார்ச் மாதம் பிறந்துள்ள நிலையில் இதுவரையிலும் புதிய ரெயில் பால திறப்பு விழா தேதி அறிவிக்கப்படாத நிலையே இருந்து வருவதால் சுற்றுலா பயணிகளும், பொது மக்களும் மிகுந்த ஏமாற்றத்தில் உள்ளனர். எனவே பாம்பன் புதிய ரெயில் பாலத்தை விரைவில் திறந்து பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என்பதே அனைத்து சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையாக உள்ளது.

# திருத்தணி காய்கறி சந்தைக்கு காமராஜரின் பெயரே நீடிக்க வேண்டும்: அன்புமணி ராமதாஸ்

சென்னை, மார்ச்.11

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

திருத்தணி ம.பொ.சி.சாலையில் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வரும் காய்கறி சந்தைக்கு அங்குள்ள வணிகர்களின் கோரிக்கைப்படி ரூ.3.02 கோடியில் புதிய கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. காலம் காலமாக காமராஜர் சந்தை என்று அறியப்பட்ட அந்த சந்தைக்கு இப்போது , 'கலைஞர் நூற்றாண்டு காய்கறி அங்காடி' என பெயர் மாற்றம் செய்ய திருத்தணி நகராட்சி தீர்மானித்திருக்கிறது. காமராஜரின் பெயரை இருட்டடிப்பு செய்ய திமுக அரசு முயல்வது கண்டிக்கத்தக்கது.

திருத்தணி நகராட்சியின் இந்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், காய்கறி சந்தைக்கு காமராஜரின் பெயரே தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் அங்குள்ள பாமக உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்தவர்கள் நகராட்சி ஆணையரிடம் மனு அளித்தனர். ஆனால், அதையும் மீறி கலைஞர் நூற்றாண்டு காய்கறி அங்காடி' என்ற பெயரில் சந்தையை திறப்பதற்கான முயற்சிகளில் திமுக அரசு ஈடுபட்டுள்ளது. இது எந்த வகையிலும் நியாயமல்ல.

தமிழ்நாடு கண்ட தலைசிறந்த அரசியல் தலைவர்களில் காமராஜர் குறிப்பிடத்தக்கவர். கலைஞராலும் அவர் மதித்துப் போற்றப்பட்டவர். அப்படிப்பட்டவரின் பெயரை நீக்கி விட்டு, கலைஞரின் பெயரை வலிந்து திணிக்க முயல்வது ஏற்புடையதல்ல. இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் கலைஞருக்கு புகழ் சேர்க்க முடியாது. மாறாக, நடுநிலையாளர்களின் வெறுப்புக்குத் தான் ஆளாக நேரிடும் என்பதை தமிழக ஆட்சியாளர்கள் உணர வேண்டும்.

அதற்கும் மேலாக, ஓர் அரசியல் தலைவரின் பெயரை நீக்கி விட்டு, இன்னொரு தலைவரின் பெயரைச் சூட்டுவது அரசியல் நாகரிகமல்ல. அடுத்து நாங்கள் ஆட்சிக்கு வரும் போது பல கட்டிடங்களுக்கும், திட்டங்களுக்கும் வைக்கப்பட்டுள்ள கலைஞரின் பெயரை நீக்கி விட்டு வேறு தலைவரின் பெயர் சூட்டப்பட்டால் அப்போது இன்றைய ஆட்சியாளர்களின் மனநிலை என்னவாக இருக்கும்? அதை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா? அதே உணர்வுடன் திருத்தணி சந்தைக்கு காமராஜரின் பெயரைமாற்றும் முடிவை அரசு கைவிட வேண்டும்.

திருத்தணி சந்தைக்கு காமராஜரின் பெயர் மாற்றப்படுவதைக் கண்டித்து முதல் போர்க்குரல் காங்கிரஸ் கட்சியிடமிருந்து வந்திருக்க வேண்டும். ஆனால், திமுகவின் அங்கமாகவே மாறிவிட்டதாலோ என்னவோ இது குறித்து அந்தக் கட்சி வாயைக் கூட திறக்கவில்லை. திருத்தணி சந்தைக்கு காமராஜரின் பெயரே நீடிக்க வேண்டும்; அவர் பெயரை நீக்கி விட்டு கலைஞர் பெயரைச் சூட்டும் முயற்சியை பாமக அனுமதிக்காது. தமிழக அரசு அதன் முடிவை மாற்றிக் கொள்ளவில்லை என்றால் அதைக் கண்டித்து தொடர் போராட்டங்களை பாட்டாளி மக்கள் கட்சி நடத்தும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தி.மு.க. அரசால் கூட்டுறவு சங்கங்கள் பெருத்த இழப்பினை சந்திக்கும் அவல நிலை ஓ.பி.எஸ்.



சென்னை, மார்ச்.11

தமிழ்நாடு முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வேட்டி, சேலை வழங்குவது வழக்கமாகக் கடைபிடிக்கப்படும் நடைமுறை. இந்த வேட்டி சேலைகள் விசைத்தறியாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து பெறப்பட்டு விநியோகிக்கப்படுவது வழக்கம். ஆனால், இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் வேட்டி சேலை வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, இவற்றை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று 1601 2025 அன்று நான் எனது அறிக்கை வாயிலாக முதல் அமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்திருந்தேன். இந்த வேண்டுகோளை தி.மு.க. அரசு கண்டு கொள்ளவில்லை.

இன்று பொங்கல் பண்டிகை முடிந்து இரண்டு மாதங்கள் முடிய இருக்கின்ற நிலையில், இந்த ஆண்டிற்கான1 கோடியே 77 லட்சம் சேலைகள், 1 கோடியே 77 லட்சம் வேட்டிகளில், 35 லட்சம் வேட்டி, சேலைகள் இன்னும் கூட்டுறவு சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படவே இல்லை என்றும், அவை அனைத்தும் கூட்டுறவு சங்கக் கிடங்குகளிலேயே உள்ளன என்றும் விசைத்தறியாளர்கள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர். இதுதான் தி.மு.க. ஆட்சியின் லட்சணம்.

தி.மு.க. அரசின் ஏமாற்று வேலை காரணமாக, கூட்டுறவு சங்கங்கள் பெருத்த இழப்பினை சந்திப்பதோடு, தொழிலாளர்களுக்கு கூலி கொடுக்க முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல், பயனாளிகளுக்கும் வேட்டி, சேலை சென்று சேரவில்லை. காலம் கடந்து கொண்டே செல்வதால், கூட்டுறவுச் சங்க கிடங்குகளில் தேங்கியுள்ள வேட்டி, சேலைகளை அரசு கொள்முதல் செய்யுமா என்ற சந்தேகம் விசைத்தறியாளர்களிடையே எழுந்துள்ளது. இந்த ஐயத்தை போக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் தி.மு.க. அரசிற்கு உள்ளது.

எனவே, முதல்அமைச்சர் இதில் தனிக் கவனம் செலுத்தி, இந்த ஆண்டு பொங்கல் பண்டிகைக்காக கொடுக்கப்பட்ட அனைத்து வேட்டி சேலைகளையும் கொள்முதல் செய்து, அதற்குரிய பணத்தை கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளித்து, வேட்டி, சேலைகளை பொதுமக்களுக்கு வழங்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

தினகனி 11.3.2025

# ஜெயலலிதாவின் ஆட்சியை மீண்டும் கொண்டுவர உறுதி ஏற்போம் சசிகலா

திருவாரூர்,, மார்ச். 11

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டைஅருகே ஜாம்புவானோடையில் உள்ள பிரசித்திப்பெற்ற தர்காவில் ரமலான் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடந்தது. இதில் சசிகலா பங்கேற்று பேசியதாவது:



புனித ரமலான் மாதத்தில் நோன்பு இருக்கும் இஸ்லாமிய பெருமக்களுக்கு வாழ்த்து தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டது மகிழ்ச்சியையும், மன நிறைவையும் அளிக்கிறது. தமிழகம் முழுவதும்

உள்ள 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பள்ளிவாசல்களுக்கு நோன்பு தயாரிக்க தேவையான அரிசியை ஜெயலலிதா வழங்கினார்.

உலமாக்களின் மாதாந்திர ஊதியத்தை ரூ.750ல் இருந்து ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கினார். இதுபோல இஸ்லாமிய சகோதர, சகோதரிகளை ஆதரித்து அவர்களுக்கு நாங்கள் எப்போதும் உறுதுணையாக நின்று போராடுவோம். வருகிற சட்டசபை தேர்தலில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து மீண்டும் ஜெயலலிதாவின் ஆட்சியை கொண்டு வருவோம் என இந்த நல்ல நாளில் உறுதி ஏற்போம்.

இவ்வாறு அவர் கூறினார்

# நீலகிரி: தேயிலைத் தோட்ட பகுதிகளில் உலா வரும் காட்டு யானை மக்கள் அச்சம்

நீலகிரி, மார்ச்.11

நீலகிரி மாவட்டம் பந்தலூர் அருகே கொளப்பள்ளி அரசு தேயிலைத் தோட்டம் ரேஞ்ச் எண் 3, செம்பக்கொல்லியில் நேற்றுமுன்தினம்

இரவு கட்டை கொம்பன் என்று அழைக்கப்படும் காட்டுயானை புகுந்தது. தொடர்ந்து அந்த காட்டுயானை தேயிலை தோட்ட தொழிலாளர்களின் குடியிருப்புகளை முற்றுகையிட்டது. மேலும்



அப்பகுதியில் உள்ள தோட்டங்களுக்குள் புகுந்து பயிர்களை மிதித்து சேதப்படுத்தியது. பின்னர் அய்யன் கொல்லியில் இருந்து கொளப்பள்ளிக்கு செல்லும் சாலைக்கு வந்து வாகனங்களை மறித்து துரத்தியது. இதனால் வாகன ஓட்டிகள் பீதியடைந்தனர்.

இதுபற்றி தகவல் அறிந்த சேரம்பாடி, பிதிர்காடு வனத்துறையினர் விரைந்து வந்து யானையை அங்கிருந்து வனப்பகுதிக்குள்விரட்டி அடித்தனர். இந்தநிலையில் நேற்று காலையும் செம்பக்கொல்லி அரசு தேயிலை தோட்டத்தில் கட்டை கொம்பன் யானை புகுந்தது. இதனால் தொழிலாளர்களும், பொதுமக்களும் அச்சம் அடைந்துள்ளனர். வனத்துறையினர் அப்பகுதியில்தொடர்ந்து முகாமிட்டு காட்டுயானையை அடர்ந்த வனப்பகுதிக்குள்விரட்டநடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

# மகள் இறந்த துக்கத்தில் காவலாளி தூக்குப்போட்டு தற்கொலை

திருவள்ளூர், மார்ச்.11

திருவள்ளூர் மாவட்டம் ஆர்.கே.பேட்டை ஊராட்சி ஒன்றியம் வீராணத்தூர் கிராமத்தை சேர்ந்தவர் வெங்கடேசன் (52 வயது). இவர் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள தனியார் நிறுவனத்தில் காவலாளியாக வேலை செய்து வந்தார். இவரது மகள் அர்ச்சனா கடந்த ஆண்டு 9ம் வகுப்பு படிக்கும் போது சரியாக பள்ளிக்கு செல்லாமல் இருந்ததாக கூறப்படுகிறது.

இதனால் தந்தை வெங்கடேசன் மகள் அர்ச்சனாவை கண்டித்துள்ளார். மனவேதனை அடைந்த அர்ச்சனா தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். மகள்

இறந்த மன உளைச்சலில் வெங்கடேசன் இருந்து வந்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வேங்கடேசன் மோட்டூர் குளக்கரை அருகில் உள்ள புளிய மரத்தில் தூக்குபோட்டு தற்கொலை செய்து கொண்டார். ஆர்.கே.பேட்டை போலீசார் உயிரிழந்த வெங்கடேசன் உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தமிழ்த் தெம்பு திருவிழாவில் விறுவிறுப்பாக நடைபெற்ற ரேக்ளா பந்தயம்

கோயம்புத்தூர் மார்.10

ஈஷாவில் நடைபெற்று வரும் தமிழ்த் தெம்பு திருவிழாவில் நேற்று (09/03/25) கொங்கு நாட்டு வீரவிளையாட்டான 'ரேக்ளா பந்தயம்' கோலாகலமாக நடைபெற்றது. ஆலாந்துறை அருகே நடைபெற்ற ரேக்ளா பந்தய நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கோவை வடக்கு மாவட்ட திமுக செயலாளர் தொண்டா முத்தூர் ரவி கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினர்.




ஆதியோகி முன்பு தமிழ் பண்பாட்டை கொண்டாடும் வகையில் தமிழ்த் தெம்பு தமிழ் மண் திருவிழா எனும் பிரம்மாண்ட விழா கடந்த பிப்ரவரி 27 ஆம் தேதி துவங்கி 11 நாட்களாக நடைபெற்று வருகிறது. இத்திருவிழாவின் ஒரு பகுதியாக 'ரேக்ளா பந்தயம்' நேற்று ஆலாந்துறை அருகே நாதேகவுண்டன் புதூர் கிராமத்தில் நடைபெற்றது. இதில் கோவை, திருப்பூர் உள்ளிட்ட கொங்கு பகுதிகளில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் தங்களின் ரேக்ளா பந்தய மாட்டு வண்டிகள் மற்றும் காளைகளுடன் பங்கேற்றனர்.

ரேக்ளா பந்தயம் 200 மீட்டர் பிரிவு மற்றும் 300 மீட்டர் பிரிவு என இரண்டு பிரிவுகளாக நடைபெற்றது. இந்த இரண்டு பிரிவுகளிலும் முதல் இடத்தை பிடித்தவர்களுக்கு ரொக்கப் பரிசாக ரூ. 1,00,000 வழங்கப்பட்டது. அதே போன்று இரண்டாம் இடத்தை

பிடித்தவர்களுக்கு 50,000, மூன்றாம் பரிசு பெற்றவர்களுக்கு 20,000, நான்காம் பரிசு பெற்றவர்களுக்கு 14,000 வழங்கப்பட்டன. மேலும் 5 முதல் 15 இடங்களை பிடித்தவர்களுக்கு தலா 3,000, 16 முதல் 30 இடங்களை பிடித்தவர்களுக்கு தலா 2,000 ரொக்க பரிசுத் தொகைகள் வழங்கப்பட்டன. மேலும் பந்தயத்தில் பங்கேற்ற அனைவருக்கும் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

இதனுடன் ஆதியோகி முன்பு கடந்த 7 ஆம் தேதி முதல் நாட்டின மாடுகள் மற்றும் குதிரைகளின் சந்தை நடைபெற்று வருகிறது. இதில் காங்கேயம், புங்கனூர், தார்பார்க்கர், கீர், சாஹிவால், பர்கூர் உட்பட 10க்கும் மேற்பட்ட நாட்டின ரக மாடுகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டன. இதில் ரேக்ளா பந்தயத்திற்கான ஜோடி காளைகள், ஜல்லிக்கட்டு இளந்தாரி காளைகள், ஊட்டச்சத்து மிக்க பால் தரும் நாட்டின ரக பசுக்கள் ஆகியன அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. அதே போன்று குதிரைகளில் மார்வாரி மற்றும் நாட்டுக் குதிரைகள் சந்தைக்கு கொண்டு வரப்பட்டன.

கடந்த மூன்று நாட்களாக நடைபெற்று வரும் நாட்டு மாட்டுகள் மற்றும் குதிரைகளின் சந்தையில் விற்பனைக்காக கொண்டு வரப்பட்ட மாடுகள் மற்றும் குதிரைகளுக்கு 3 நாட்களுக்கும் தேவையானதீவனங்கள், தண்ணீர் மற்றும் வெயில் தாக்கத்தை தவிர்க்கும் வகையிலான அரங்குகள் உள்ளிட்டவை ஈஷா சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. மேலும் சந்தைக்கு வரும் மக்களுக்கும் தேவையான தங்குமிடம் மற்றும் உணவு ஈஷா சார்பில் வழங்கப்பட்டது. இந்த சந்தை இன்றோடு நிறைவு பெறுகிறது.

தமிழ்த் தெம்பு திருவிழாவில் தமிழ்நாட்டை சார்ந்த புவிசார் குறியீடு பெற்ற பொருட்களின் விற்பனை மற்றும் கண்காட்சி,

தமிழ் பண்பாட்டு கலைகளின் பயிற்சி பட்டறைகள், தினமும் மாலை வேளைகளில் தமிழ் நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள், பாரம்பரிய உணவுக் கடைகள் உள்ளிட்டவைகள் இடம் பெற்று இருந்தன. இதில் ஆயிரக்கணக்கான மக்கள் தினமும் திரளாக பங்கேற்றனர்.

இந்த ஆண்டு தமிழ்த் தெம்பு திருவிழா கடந்த பிப் 27 ஆம் தேதி முதல் மார்ச் 9 வரை 11 நாட்கள் நடைபெறுவதாக திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால் பொது மக்களிடம் இருந்த கிடைத்த சிறப்பான வரவேற்பினை முன்னிட்டு விழாவினை மேலும் ஒரு நாள் நீட்டிக்கப்பட்டு நாளையும் நடைபெறும்.

# நாகர்கோவில்: போதைப்பொருட்கள் விற்ற 2 பேர் கைது

கன்னியாகுமரி, மார்ச்.10

நாகர்கோவில் வடசேரி போலீசார் போதைப்பொருட்கள் விற்பனை குறித்து ரகசிய தகவல் கிடைத்தது. இதன் அடிப்படையில் நேற்று எஸ்.எம்.வி. பள்ளிக்கு அருகே போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு போதைப்பொருட்கள் விற்றதாக கூறி இடலாக்குடியை சேர்ந்த அபுபக்கர் என்பவரை போலீசார் கைது செய்தனர். அவரிடம் நடத்திய சோதனையில் 14 கிலோ போதைப்பொருட்களை போலீசார் பறிமுதல் செய்தனர்.

இதேபோல ஆயுதப்படை முகாம் சந்திப்பு பகுதியில் போதைப்பொருட்கள் விற்றதாக கூறி பெரியவிளையை சேர்ந்த அய்யப்பனை நேசமணி நகர் போலீசார்கைதுசெய்தனர்.அவரிடம்நடத்தியசோதனையில் 2 போதைப்பொருள் பாக்கெட்டுகளை போலீசார் பறிமுதல் செய்தனர்.

இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஜிவி பிரகாஷின் "கிங்ஸ்டன்" மேக்கிங் வீடியோ வெளியானது





இசையமைப்பாளர் ஜி. வி. பிரகாஷ் தற்போது நடிகராக அவரது 25வது படமான 'கிங்ஸ்டன்' எனும் படத்தில் நடித்துள்ளார். அறிமுக இயக்குனர் கமல் பிரகாஷ் இயக்கியுள்ள இப்படத்தில் திவ்ய பாரதி கதாநாயகியாக நடித்துள்ளார். இப்படத்தை ஜி.வி. பிரகாஷின் பேரலல் யூனிவர்ஸ் பிக்சர்ஸ் மற்றும் ஜீ ஸ்டுடியோஸ் நிறுவனம் இணைந்து தயாரித்துள்ளனர். இந்த படத்தில் நடிகை திவ்யபாரதி ஜி.வி.பிரகாஷுக்கு ஜோடியாக நடித்துள்ளார்.

தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய மொழிகளில் வெளியாகி இருக்கும்இப்படம்முதல்இந்தியகடலில்நடக்கும்அட்வென்ச்சர் ஹாரர் திரைப்படமாகும். இப்படம் வெளியாகி மக்களிடையே கலவையான விமர்சனத்தை பெற்று வருகிறது.

இந்நிலையில் படத்தின் மேக்கிங் வீடியோவை படக்குழு வெளியிடுள்ளது. திரைப்படத்தை கப்பல் செட் போட்டும், சில காட்சிகளை கடலில் எடுத்துள்ளனர். கிராபிக்ஸ் காட்சிகளை குறைக்க தத்ரூபமாக இருக்க வேண்டும் என்பதற்காக நடிகர்கள் சிறப்பு மேக்கப்களை போட்டுள்ளனர்.

# ஸ்ரீலீலாவின் 'ராபின்ஹூட்' பட சிறப்பு பாடலின் புரோமோ வெளியீடு

ஸ்ரீலீலாகதாநாயகியாகநடித்துள்ளபடம்ராபின்ஹூட். நிதின் கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தை வெங்கி குடுமுலா எழுதி இயக்கி இருக்கிறார். ராஜேந்திர பிரசாத், ஷைன் டாம் சாக்கோ, வெண்ணேலா கிஷோர், மைம் கோபி உள்ளிட்ட பலர் நடித்துள்ள இப்படம் வரும் 28ம் தேதி வெளியாக உள்ளது.



ஜிவி பிரகாஷ் இசையமைக்கும் இப்படத்தின் முதல் பாடலான 'ஒன் மோர் டைம்' மற்றும் 2வது பாடலான 'வாட்டெவர்யூகோ'சமீபத்தில்வெளியாகிவைரலாகின. இதனைத்தொடர்ந்து, இப்படத்தின் 3வது பாடலான 'அதிதா சர்ப்ரைஸ்' இன்று மாலை 5.04 மணிக்கு வெளியாக உள்ளது. இந்நிலையில், இப்பாடலின் புரோமோவை படக்குழு வெளியிட்டுள்ளது. இந்த சிறப்பு பாடலுக்கு பிரபல நடிகை கெட்டிகா ஷர்மா நடனமாடியுள்ளார்.

# பூஜையுடன் துவங்கிய 'சர்தார் 2' படத்தின் டப்பிங் பணி



டைட்டானிக் படம் மூலம் புகழ்பெற்ற ஜேம்ஸ் கேமரூன் இயக்கத்தில் 2009ல் வெளியான அவதார் படம் ஆச்சரியமான கற்பனை உலகம் பிரமாண்ட கிராபிக்ஸ் காட்சிகளால் உலகையே திரும்பி பார்க்க வைத்தது. 3 ஆஸ்கார் விருதுகளை வென்றது.

ரூ.20 ஆயிரம் கோடிக்கு மேல் வசூலித்து சாதனையும் நிகழ்த்தியது. இதில் சாம் வொர்த்திங்டன், ஜோ சல்தானா. ஸ்டீபன் லாங் உள்பட பலர் நடித்து இருந்தனர். இந்நிலையில், இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க தனக்கு வாய்ப்பு வந்ததாக நடிகர் கோவிந்தா கூறி இருக்கிறார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், " அமெரிக்காவில் சர்தார்ஜி என்பவரை தொழில் ரீதியாக சந்தித்தேன். அவர் சில வருடங்களுக்குப் பிறகு, என்னை ஜேம்ஸுடன் ஒரு படம் பண்ண சொன்னார். அதனால் அவர்களை இரவு உணவிற்கு அழைத்து படம் குறித்து பேசினேன். அப்போது படத்தின் பெயர் அவதார் என்றும் அதில் ஹீரோ மாற்றுத்திறனாளி என்றும் ஜேம்ஸ் என்னிடம் கூறினார். இதற்காக அவர் எனக்கு 18 கோடி ரூபாய் தருவதாகவும், 410 நாட்கள் படப்பிடிப்பு நடத்த வேண்டும் என்றும் கூறினார்.

ஆனால், நான் படத்தில் நடிக்க மறுப்பு தெரிவித்தேன். படப்பிடிப்பு பிறகு ஆஸ்பத்திரியில்தான் இருப்பேன் என்றேன். நம்மிடம் இருக்கும் ஒரே கருவி நம் உடல்தான். சில சமயங்களில் தொழில் ரீதியாக சில விஷயங்கள் மிகவும் முக்கியமானதாக தோன்றினாலும், அதனால் உடலில் ஏற்படும் விளைவுகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்' என்றார்.

# ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி: அதிக முறை கோப்பையை வென்று இந்திய அணி உலக சாதனை



8 அணிகள் பங்கேற்றிருந்த 9வது ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி தொடர் நேற்றுடன் நிறைவடைந்தது. இதன் இறுதிப்போட்டியில் நியூசிலாந்தை வீழ்த்தி இந்தியா சாம்பியன் பட்டம் வென்றது.

ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபியை இந்தியா வெல்வது இது 3வது முறையாகும். இதன் மூலம் ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராயியை அதிக முறை வென்ற அணி என்ற மாபெரும் உலக சாதனையை இந்தியா படைத்துள்ளது. இந்திய அணி ஏற்கனவே 2002, 2013ம் ஆண்டுகளில் நடைபெற்ற சாம்பியன்ஸ் டிராபி தொடர்களில் சாம்பியன் பட்டம் வென்றிருந்தது. இந்தியாவுக்கு அடுத்த இடத்தில் ஆஸ்திரேலியா (2 முறை) உள்ளது.

# சாம்பியன்ஸ் டிராபி: கடந்த முறை என்னால் முடியவில்லை... ஆனால் இன்று.. ஹர்திக் பாண்ட்யா



9வது ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி தொடரில் துபாயில் நேற்றிரவு அரங்கேறிய இறுதிப்போட்டியில் முன்னாள் சாம்பியன்களான இந்தியா நியூசிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த நியூசிலாந்து 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்கு 251 ரன்கள் சேர்த்தது. அதிகபட்சமாக டேரில் மிட்செல் 63 ரன்கள் அடித்தார். இந்திய தரப்பில் குல்தீப் யாதவ், வருண் சக்ரவர்த்தி தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

பின்னர் 252 ரன்கள் இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி 49 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கு 254 ரன்கள் சேர்த்து 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று கோப்பையை சொந்தமாக்கியது. அதிகபட்சமாக கேப்டன் ரோகித் சர்மா 76 ரன்கள் அடித்தார்.

ஒரு கட்டத்தில் இந்திய அணி நெருக்கடியில் சிக்கியபோது கே.எல்ராகுல் ஹர்திக் பாண்ட்யா ஜோடி சிறப்பாக விளையாடி நெருக்கடியை சமாளித்ததுடன் அணிக்கும் வெற்றியை உறுதி செய்தனர்.

முன்னதாக கடந்த சாம்பியன்ஸ் டிராபி (2017 ம் ஆண்டு) தொடர் இறுதிப்போட்டியில் இந்தியா பாகிஸ்தான் அணிகள் மோதின. இதில் பாகிஸ்தான் அணி இந்தியாவை வீழ்த்தி கோப்பையை கைப்பற்றியது. அந்த ஆட்டத்தில் ஹர்திக் பாண்ட்யா அதிரடியாக விளையாடினார். இருப்பினும் போட்டியை வென்று கொடுக்க முடியவில்லை.

இந்நிலையில் கடந்த சாம்பியன்ஸ் டிராபி தோல்வியை தம்மால் மறக்க முடியவில்லை என்று ஹர்திக் பாண்ட்யா கூறியுள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "சாம்பியன்ஸ் டிராபி போன்ற ஐசி.சி. கோப்பையை வென்றது அற்புதமான வெற்றி. கடந்த சாம்பியன்ஸ் டிராபி என்னுடைய இதயத்துக்கு மிகவும் நெருக்கமாக இருப்பதை நினைத்துப் பார்க்கிறேன். அந்த நேரத்தில் என்னால் பினிஷிங் செய்ய முடியவில்லை. ஆனால் இன்று (அதாவது நேற்று) நாங்கள் அனைவரும் நன்றாக விளையாடி வெற்றியில் பங்காற்றியது மகிழ்ச்சியை கொடுக்கிறது.

புத்திசாலித்தனம், பொறுமை ஆகியவற்றைக் கொண்டுள்ள கே.எல். ராகுல் சரியான நேரத்தில் தனது வாய்ப்புகளை எடுத்தார். இதுதான் கே.எல். ராகுல் என்று நினைக்கிறேன். அவரிடம் அற்புதமான திறமை இருக்கிறது. அவர் பந்தை அடிக்கும் விதத்தில் வேறு யாரும் அடிக்க முடியாது என்று நினைக்கிறேன். இந்த போட்டி அவருடைய திறமைக்கான கண்காட்சியாக அமைந்தது" என்று கூறினார்.

# இண்டியன்வெல்ஸ் டென்னிஸ்: ஜெசிகா பெகுலா 4வது சுற்றுக்கு முன்னேற்றம்



இண்டியன்வெல்ஸ் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடந்து வருகிறது. இதில் இன்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவின் 3வது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா, சீனாவின் வாங் சின்யு உடன் மோதினா.

இதில் முழுவதுமாக ஆதிக்கம் செலுத்திய ஜெசிகா பெகுலா 62 மற்றும் 61 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு (4வது சுற்று) தகுதி பெற்றுள்ளார். இவர் 4வது சுற்றில் ஸ்விடோலினா உடன் பலப்பரீட்சை நடத்த உள்ளார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.